بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 29/06/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஈதுல் அழ்ஹா பேருரையின் சுருக்கம்**

☆ **குர்பானியின் ஆன்மாவிற்குப் பின்னால் இருக்கும் உண்மையான விஷயம் அல்லாஹ்வின் திருப்தியை விரும்புவதாகும்**
☆ **நமது எல்லா வகையான தியாகங்களுக்கும் பயன்படுவது இறையச்சம் ஆகும்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ

نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

لَنۡ یَّنَالَ اللّٰہَ لُحُوۡمُہَا وَ لَا دِمَآؤُہَا وَ لٰکِنۡ یَّنَالُہُ التَّقۡوٰی مِنۡکُمۡ ؕ

کَذٰلِکَ سَخَّرَہَا لَکُمۡ لِتُکَبِّرُوا اللّٰہَ عَلٰی مَا ہَدٰىکُمۡ ؕ وَ بَشِّرِ الۡمُحۡسِنِیۡنَ ﴿﴾

(குர்பானி கொடுக்கும்) அவற்றின் இறைச்சியோ, அவற்றின் இரத்தமோ ஒருபோதும் அல்லாஹ்வை சென்றடைவதில்லை. ஆனால் உங்களின் இறையச்சம் அவன் வரை சென்றடையும். அல்லாஹ் உங்களுக்கு நேர்வழியைக் காட்டியதற்காக, நீங்கள் அவனது பெருமையினை எடுத்துரைக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு அவன் அவற்றை உங்களுக்கு தொண்டு செய்ய வைத்தான். மேலும் அதிகப்படியான நன்மை செய்பவர்களுக்கு நீர் நற்செய்தியை வழங்குவீராக. (திருக்குர்ஆன் 22:38 காண்க).

இன்று ஈதுல் அழ்ஹா ஆகும். இந்தப் பெருநாள் தியாகம் செய்யும் பெருநாள் என்றும் அழைக்கப்படுகிறது. அஹ்மதிகளுக்கு அல்லாஹ்வின் அருளால் பொருள் தியாகம் செய்யும் பழக்கம் இருக்கிறதுதான்; இன்னும் கூறுவதென்றால், இந்தக் காலத்தில் கலப்பற்ற முறையில் அல்லாஹ்வுக்காக உயிரைக் கொடுப்பது பற்றிய புரிதலும் அஹ்மதிகளுக்கு இருக்கும் அளவுக்கு வேறு யாருக்கும் அநேகமாக இருக்கவே முடியாது. எனவே அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்பவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறைக்கு ஏற்பவும் செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள், மாடுகள் ஆகியவற்றிற்காக செலவு செய்வது அஹ்மதிகளுக்கு எத்தகைய மகிழ்ச்சிக்குரிய விஷயம் என்றால், அதைப் பற்றி கணித்துப் பார்க்க முடியாது. மேலும் இந்தக் குர்பானிகளை செய்ய இயலாதவர்களின் உணர்ச்சிப்பூர்வமான நிலை எவ்வாறு இருக்கிறது என்பதைப் பற்றி அனுமானிப்பதே கட்டினமானதாகும். ஆனால் எந்நிலையிலும் அஹ்மதிகளுக்கு இந்த நாட்களில் தமது உணர்ச்சிகளை தியாகம் செய்ய வேண்டியது ஏற்படுகின்ற அதே நேரத்தில் - மேலும் உணர்ச்சிகளை

தியாகம் செய்வது என்பது சாதாரணமான விஷயமல்ல - உணர்ச்சிகளை அல்லாஹ்வின் சந்நிதியில் துஆக்களாக மாற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள். துஆக்களில் மிகப் பெரிய ஆற்றல் இருக்கிறது. ஹஸ்ரத் ஹாஜிரா (அலைஹஸ் ஸலாம்) மற்றும் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) ஆகியோரின் துஆக்கள், மன்றாடுதல், நிம்மதியற்ற நிலைமை, அல்லாஹ்வின் மீது அவர்கள் வைத்திருந்த தவக்குல் (நம்பிக்கை) ஆகியவையே தண்ணீரின் நீரூற்றைப் பெருக்கெடுத்து ஓடச் செய்து விட்டது. மேலும் ஒரு நகர மக்களையும் குடிபெயரச் செய்து விட்டது. அதுவும் இஸ்லாத்தின் தலைமையகமாக ஆக்கிவிட்ட அத்தகைய நகரமாக ஆக்கியது.

**எனவே நாமும் பெருநாள் குர்பானி மூலமாக, நாம் கால்நடையை குர்பானி செய்ய வேண்டும்; அவ்வளவுதான் என்ற பாடத்தை மட்டும் நாம் கற்றுக் கொள்ளக் கூடாது. உண்மையான விஷயம் குர்பானியின் ஆன்மாவிற்குப் பின்னால் அல்லாஹ்வின் திருப்தியை விரும்புவதாகும்.** இறையச்சம்தான் நமது எல்லா வகையான தியாகங்களுக்கும் பயன் தரத்தக்கதாகும்.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தமது கனவின் அடிப்படையில் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களிடம், கனவில் நான் உன்னை அறுத்துப் பலியிடுவதாகக் கண்டேன். இது தொடர்பாக உனது கருத்து என்ன என்று கேட்டபோது, அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு விரும்பம் கொண்டிருந்த அந்த மகன், என் தந்தையே! உமக்கு கட்டளையிட்டதையே நீர் செய்வீராக என்று விடையளித்தார். மேலும் தனது கழுத்தை கத்திக்குக் கீழே வைத்து விட்டார். மேலும் அல்லாஹ், தந்தை மகன் ஆகிய இருவரின் தியாக உணர்வைப் பாராட்டியவாறு, தந்தையை தன் மகனின் கழுத்தின் மீது கத்தியால் அறுப்பதிலிருந்து தடுத்து விட்டான். மேலும் அதற்குப் பகரமாக கால்நடையை அறுக்குமாறு கட்டளையிட்டான்.

எனவே, இத்தகைய எழுச்சி இருந்தது. அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கான செயல் அளவிளான இத்தகைய காட்சியாக அது இருந்தது. அதை அல்லாஹ் ஒப்புக் கொண்டவாறு, அ(ந்தச் செயலான)தை இஸ்லாமிய போதனையின் அடிப்படையில் இருக்கும் ஒன்றாகவும், குர்பானியின் அம்சங்களிலும் இணைத்துக் கொண்டான். மேலும் அந்த மனித உயிருக்குப் பகரமாக கால்நடையின் குர்பானியை வெறும் வெளிப்படையாக வெளிப்படுத்துவதற்காக மட்டும் வைக்கவில்லை. மாறாக, முஸ்லிம்களுக்கு ஹஜ்ஜின்போது அல்லது ஹஜ்ஜுப் பெருநாளின்போது கூட குர்பானி கொடுப்பதற்கான கட்டளையிட்டான் என்றால், இறையச்சத்தை முன்னிறுத்தியவாறு செய்யும்போதுதான், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக செய்யப்படும்போதுதான், இந்த குர்பானி ஏற்புடைமையாகும் என்ற தெளிவையும் கொடுத்து விட்டான்.

அதன்படி, நான் ஓதிய அல்லாஹ்வின் இந்த வசனத்தில் இந்த விஷயத்தைப் பற்றிய தெளிவை (அல்லாஹ்) கொடுத்து விட்டான். இந்தக் குர்பானியின் தத்துவம் மற்றும் குறிக்கோள் பற்றி விளக்கியவாறு இந்த வசனத்தின் ஒளியில் **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

“இறைவன் இஸ்லாமிய ஷரீஅத்தில் பல அவசியமான கட்டளைகளுக்காக முன்மாதிரிகளை நிலைநாட்டியிருக்கிறான். அதன்படி, மனிதன் தனது எல்லா

ஆற்றல்களுடனும், தன்னை முழுமையாகவும் இறைவனின் வழியில் தியாகமாகி விட வேண்டும் என்று மனிதனுக்குக் கட்டளையிட்டான். எனவே வெளிப்படையான தியாகங்கள் அந்த நிலைமைக்காகவே முன்மாதிகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இறைவனுக்கு உங்களின் குர்பானிகளின் இறைச்சி சென்றடைவதில்லை; இரத்தமும் சென்றடைவதில்லை. ஆயினும் உங்களின் இறையச்சம் அவனை சென்றடைகின்றது என்று அல்லாஹ் கூறியிருப்பது போன்று, உண்மையான குறிக்கோள் இந்த குர்பானியே ஆகும். அதாவது அவனது வழியில் மரணித்தே போய்விடும் அளவுக்கு, நீங்கள் (இறைவனாகிய) அவனுக்கு அஞ்சுங்கள். அதாவது, **நீங்கள் உங்கள் கைகளால் குர்பானிகளை அறுத்துப் பலியிடுவது போன்றே, நீங்களும் இறைவன் வழியில் பலியாகி விடுங்கள். அந்த அளவுக்கு ஓர் இறையச்சம் இந்த படித்தரத்தை விடக் குறைவாக இருக்கும்போது, அது இன்னும் குறைபாடு கொண்டதாகும்.”**

இந்த இறையச்சமும், இந்த சிந்தனையும்தான் குர்பானி கொடுப்பவருக்கு இருக்க வேண்டும். இல்லையென்றால், வெளிப்படையான குர்பானி என்பது ஒன்றுமல்ல. அல்லாஹ் பெருநாளுக்கான குர்பானி செய்யும் நல்வாய்ப்பையும் நமக்கு வழங்குவானாக என்றும், உண்மையான இறையச்சமாகிய அத்தகைய இறையச்சத்தை அல்லாஹ் நம்மிடம் உருவாக்குவானாக என்றும் துஆ செய்து கொண்டிருங்கள். அத்தகைய இறையச்சத்தைப் பற்றித்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு அறிவுரை வழங்கினார்கள். அதை நபி (ஸல்) அவர்களின் தூய்மைப்படுத்தும் ஆற்றல் மற்றும் தர்பிய்யத்தின் விளைவாக நபித்தோழர்கள் தமதாக்கிக் கொண்டனர். அவர்களின் ஒவ்வொரு வினாடியும் தியாகங்களில் கழிந்தன. அவர்களின் முன்மாதிரிகள் நமக்கு எடுத்துக்காட்டுகளாக இருக்கின்றன. மேலும் பின்னர் இக்காலத்தில் இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக அதைப் புதுப்பித்தான். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நாம் இறையச்சத்தின் வழிகளில் நடப்பதற்கு மீண்டும் மீண்டும் நமக்கு அறிவுரை கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மார்க்கத்தை மனிதன் எப்போது புரிந்து கொள்ள முடியும் என்ற விஷயத்தை தெளிவுபடுத்திவாறு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

**“இறைவன் ஒருவரை தூய்மையாக்காத வரை, எவரும் தூய்மையடைய முடியாது;** மனிதனுடைய ஆன்மா இறைவனின் வாசலில் பணிவுடனும், தன்னடக்கத்துடனும் விழும்போது இறைவன் அவனது துஆவை ஒப்புக் கொள்வான். மேலும் அவர் இறையச்சம் கொண்டவராக மாறுவார். அந்த நேரத்தில், அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மார்க்கத்தைப் புரிந்து கொள்ளும் தகுதியுள்ளவராக மாற முடியும். **அது இல்லாமல், அவர் மார்க்கம், மார்க்கம் என்று கூறிக் கொண்டிருந்தாலும், இறைவணக்கம் செய்து கொண்டிருந்தாலும் அது அவர் தன் முன்னோர்களிடமிருந்து குருட்டுத்தனமாகக் கேட்டு செய்கின்ற ஒரு சம்பிரதாயமான விஷயமும், சிந்தனைகளும் ஆகும்.** இந்த பணிவுடனும், தன்னடக்கத்துடனும் அல்லாஹ்வின் முன்னிலையில், ஆன்மா விழ வேண்டியதாகவே இருந்தது. அது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை), ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை), ஹஸ்ரத் ஹாஜிரா (அலைஹஸ் ஸலாம்) ஆகியோருக்கு இறைவனிடம் அங்கீகாரத்தின் எத்தகைய படித்தரத்தைக் வழங்கியது என்றால்,

அவர்களின் துஆக்களின் கனிகளை இன்று நாம் புசித்துக் கொண்டிருக்கிறோம். அந்த ஒப்புக் கொள்ளப்பட்ட துஆக்களின் விளைவாகவே அவர்களின் தலைமுறையில் எத்தகைய மகத்தான மனிதர் தோன்றினார் என்றால், அவர்களுடன் இணைந்திருப்பதாலும், அவர்களைப் பின்பற்றுவதாலும் இறைவன் கிடைக்கின்றான்; துஆக்கள் அங்கீகாரம் பெறுகின்றன.''

**நாம் உண்மையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்றால், நாம் இறையச்சத்தின் வழியில் நடந்தவாறு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மார்க்கத்தைப் பற்றிய புரிதலை உருவாக்குவது நமது பணியாகும்.** இறைவன் நமது துஆக்களைக் எவ்வாறு கேட்கின்றான் என்று பிறகு பாருங்கள்.

**பிறகு குர்பானி கொடுப்பதன் தத்துவம், இறையச்சத்தின் உண்மைத்துவம் ஆகியவை பற்றி விளக்கியவாறு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இன்னோரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

"நேர்வழியில் நடப்பட்டவர்கள், ஆன்மா மற்றும் ஆன்மிகம் ஆகியவற்றின் அடிப்படையில், இறைவன் பக்கம் உயர்த்தப்படுகின்றார்களே அன்றி, அவர்களின் இறைச்சியும், தோலும் அவற்றின் எலும்புகளும் இறைவன் வரை சென்றடைந்து விடுகின்றன என்பதன்று. எனவே மீண்டும் அறிவுரை என்னவெனில், உங்கள் செயல்களை கவனியுங்கள். நற்செயல்கள்தான் மனிதனின் குர்பானிகள் அங்கீகாரத்தைப் பெறும் காரணிகளாக மாறுகின்ற மூலதனங்களாக இருக்கின்றன. மேலும் **அல்லாஹ்வுக்கான உரிமைகளும், அடியார்களின் உரிமைகளும் நிறைவேறுகின்றவையும்தான் நற்செயல்கள் ஆகும்.''**

**பின்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இன்னும் தெளிவுபடுத்தியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:**

"(இறையச்சம் பற்றிய புரிதல், அதன் கனிகள் ஆகிய) இவை அனைத்தும் இறைவனைப் பற்றிய முழுமையான ஞானத்திற்குப் பிறகு கிடைக்கின்றது. (அல்லாஹ்வுக்காக) அச்சம் கொள்வது, அன்பு செலுத்துவது, மதிப்பளிப்பது ஆகியவற்றிற்கான வேர் முழுமையான இறைஞானம் ஆகும். எனவே **எவருக்கு முழுமையான இறைஞானம் வழங்கப்பட்டு விட்டதோ, அவருக்கு (இறைவனைப் பற்றிய) அச்சமும், (இறைவன் மீதுள்ள) அன்பும், முழுமையாக வழங்கப்பட்டு விட்டது.** மேலும் **எவருக்கு (அல்லாஹ்வுக்காக) அச்சம் கொள்வது, அன்பு செலுத்துவது ஆகியவை முழுமையாக வழங்கப்பட்டு விட்டதோ, அவருக்கு விஷமத்தனத்தால் உருவாகும் ஒவ்வொரு பாவத்திலிருந்தும் ஈடேற்றம் வழங்கப்பட்டு விட்டது.** எவருக்கு அல்லாஹ்வைப் பற்றிய புரிதல் ஏற்பட்டு விடுகின்றதோ அவர் எவ்வளவு நற்பேறு பெற்றவர் ஆவார்! மேலும் இந்த இறைஞானம் கிடைத்து விட்டது என்பதையும், **அல்லாஹ்வைப் பற்றிய அச்ச உணர்வும், அன்பும் உள்ளத்தில் உருவாகி விட்டது என்பதையும் எப்படித் தெரிந்து கொள்வது என்றால்,** அதற்கான அளவீடு, எல்லா பாவங்களிலிருந்தும் மனிதன் தப்பித்திருப்பது என்பதேயாகும். மனிதன் என்ற வகையில், எப்போதாவது பலவீனம் வெளிப்பட்டு விட்டாலும், உடனே பாவமன்னிப்புத் தேடியவாறு இறைவன் பக்கம் திரும்ப வேண்டும். நம்பிக்கை கொண்டவர் ஒருபோதும் எந்தத் தவற்றையும் விஷமத்தனத்தால் செய்வதில்லை. மாறாக, எப்போதும் அவர் மீது அல்லாஹ்வின் அன்பு மிகைத்தவாறு இருக்கிறது. இறைவன் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற உறுதியில் அவன்

எல்லா நேரமும் நிலைத்திருப்பதும், எனது உள்ளத்தின் நிலையையும் அல்லாஹ் அறிகின்றான். **இறைவனுக்கு விருப்பமில்லாத எனது எந்தவொரு செயலும் இருக்கக் கூடாது என்பதும்தானே சரியான ஈமான்!"**

இந்த நிலை இருந்தால், இந்த இஸ்லாத்தின்படிதான் ஒரு நம்பிக்கையாளர் நடக்க வேண்டும் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். இது இஸ்லாத்தின் எத்தகைய நிலை என்றால், இதன் தாக்கத்தால், மனிதன் தனது கழுத்தை வெட்டிக் கொள்வதற்கு ஆயத்தமாகி விடுகிறான்; எல்லா தியாகங்களுக்கும் ஆயத்தமாகி விடுகிறான். அதாவது அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவது குறிக்கோளாக இருக்கிறது. மேலும் ஒவ்வொரு சொல்லும், செயலும் இறைவனை திருப்திப்படுத்துவதற்காக இருக்கிறது. **இந்த நிலை இருந்தால், இது உண்மையான இஸ்மாயீலிய தியாகத்தின் முன்மாதிரியாகும். எனவே இந்தப் பெருநாள் நமக்கு இந்த முழுமையான அன்பு, முழுமையான நேசம் பற்றி பாடம் புகட்டுவதற்காக இருக்கிறது.** வெறும் கால்நடைகளை அறுத்து குர்பானி கொடுத்து அவற்றின் இறைச்சியை உண்பதில் எதுவுமில்லை. இன்று நாம் இந்த இறைஞானத்தின் நுண்ணிய கருத்தைப் புரிந்து கொண்டால், துஆ அங்கீகரிக்கப்படுவதன் மகத்தான அடையாளத்தையும் பார்ப்பவர்களாகி விடுவோம். வெற்றிகளின் காட்சிகளை நாம் நமது வாழ்க்கையில் பார்ப்பவர்களாகி விடுவோம்.

**கலப்பற்ற இறையச்சத்தை உருவாக்குவதுடன், ஈதுல் அழ்ஹாவில் இருக்கும் வெளிப்படையான குர்பானியையும் வசதி படைத்தவர்கள் செய்ய வேண்டும்.** இந்த வெளிபடையான குர்பானிகளும் சுன்னத் ஆகும். இப்ராஹீமிய சுன்னத்தை இஸ்லாம் குறிப்பாக நிலைநாட்டியுள்ளது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்போதும் இந்தக் குர்பானியை செய்தார்கள். இன்னும் கூறுவதென்றால், உம்மத்தின் ஏழை மக்கள் சார்பாகவும் நபி (ஸல்) அவர்கள் இந்தக் குர்பானியை செய்து வந்தார்கள். எனவே இந்த வெளிப்படையான குர்பானியும் அடியார்களின் உரிமைகளை நிறைவேற்றுவதற்கு ஒரு காரணியாக அமைகிறது. மேலும் இதனாலும் இறை அன்பு அதிகமாகின்றது. ஏனெனில் அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கு செய்யும் தொண்டு மனிதன் அல்லாஹ்வின் மீதுள்ள அன்பின் காரணமாக செய்கின்றான். எனவே இதுவே வெளிப்படையான குர்பானி மற்றும் வெளிப்படையான செயலின் ஞானம் ஆகும். அதன் வெளிப்படையான அசைவுகள், செயல்கள் ஆகிவற்றின் தாக்கம் ஆன்மாவின் மீதும் ஏற்படுகிறது.

வசதி படைத்தவர்கள் பெருநாளின் குர்பானிக்காக இலட்சக்கணக்கான ரூபாய்களை செலவு செய்கின்ற அதே நேரத்தில், ஏழைகளுக்கு அவர்களின் மற்ற தேவைகளுக்காகவும் கொஞ்சம் செலவுக்காக கொடுத்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றுங்கள். அல்லாஹ் நம்மிடம் இறையச்சத்தை உருவாக்கியவாறு, நமது நிலைமைகளை இறைதிருப்திக்கு ஏற்றவாறு, உருவாக்கும் நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக. மேலும் நாம் கலப்பற்றமுறையில் அவனுக்காகவே ஆகி விட வேண்டும். மேலும் அல்லாஹ் நம்மை நமது எதிரிகளிடமிருந்து கூடிய விரைவில் பாதுக்காப்பிற்கான வழிவகையை உருவாக்குவானாக. மேலும் நமது தியாகங்களை ஏற்றுக் கொள்வானாக. **எவர்களுக்கு ஏதாவதொரு காரணத்தால் குர்பானி கொடுக்கும் நல்வாய்ப்பு கிடைக்காவிட்டாலும், அல்லாஹ் அவர்களின் நிய்யத்திற்கு ஏற்பவும் அவர்களுக்கு நற்கூலி வழங்குவானாக.**

முஸ்லிம்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலைப் புரிந்தவாறு, நபி (ஸல்) அவர்களின் ஊழியத்திற்கேற்ப வருகை தந்திருக்கும் **வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களையும், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி (அலை) அவர்களையும் ஏற்றுக் கொள்பவர்களாக ஆகக் கூடிய அறிவையும், புரிதலையும் வழங்குவானாக.**

அல்லாஹ்வுக்காக மட்டுமே சிறைவாசம் எனும் துன்பங்களை தாங்கிக் கொண்டிருக்கின்ற, அல்லாஹ்வின் வழியில் சிறைப்பிடிக்கப்பட்டிருப்பவர்களின் தியாகங்களையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக. மேலும் அவர்களுக்கு கூடிய விரைவில் விடுதலை பெறுவதற்கான ஏற்பாட்டையும் அல்லாஹ் செய்தருள்வானாக. மேலும் இறைவழியில் உயிர் நீத்தவர்களின் குடும்பங்களையும் அல்லாஹ் தனது பாதுகாப்பிலும் அமைதியிலும் வைப்பானாக. அவர்களுக்கு இறைவனுடன் உள்ள தொடர்பில் முன்னேறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. **உலகில் சோதனை, குழப்பம், போர்கள் ஆகியவை முடிவுக்கு வருவதற்காகவும் துஆ செய்யுங்கள். பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளுக்காக குறிப்பாக துஆ செய்யுங்கள்.** அல்லாஹ் அவர்களின் பொருளாதார அளவிலான, உயிர் அளவிலான, உணர்வுகளின் அளவிலான எல்லா தியாகங்களையும் ஒப்புக் கொள்வானாக. புர்கீனாபாஸோ, வங்க தேசம், அல்ஜீரியா மற்றும் உலகிலுள்ள அனைத்து அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்கள் அனைவரையும் தனது அருள், கருணை எனும் போர்வையில் போர்த்திக் கொள்வானாக. மேலும் எல்லா அஹ்மதிகளும் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கொடியை உலகில் ஏற்றுவதற்காவும், ஓரிறை கொள்கையைப் பரப்புவதற்காகவும் எப்போதும் தமது உறுதிமொழியை நிறைவேற்றியவாறு, எல்லா வகையான தியாகங்களையும் செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

*இரண்டாவது குத்பாவுக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள், "உங்கள் அனைவருக்கும் ஈது முபாரக். உலகிலுள்ள அஹ்மதிகளுக்கும், அனைவருக்கும் இந்தப் பெருநாள் அருளுக்குரியதாக அமையட்டுமாக" என்று அனைவருக்கும் பெருநாள் வாழ்த்து தெரிவித்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَن یَّھْدِہِ اللّٰہُ فَلاَ مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلاَ ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلاَّ اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A)**